Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, DECEMBER 18 2024

புதன்கிழமை, 18 டிசெம்பர்,2024 | ஒளி: 10 கதிர் 117 | பக்கம்:07 | நகரப்பதிப்பு★ | FREE

# “ஏமாற வேண்டாம்”

**அவ்வாறான விளம்பரங்கள் போலியானவை என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்தது**

**அது அதிகாரப்பூர்வ இலச்சினையை கொண்ட இணையதளத்திற்கு அல்ல, வேறு இணையதளத்திற்கு பயனரை அழைத்துச் செல்லும்**

இலங்கையின் மத்திய வங்கி, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மற்றும் இலங்கையின் முன்னணி நிறுவனங்களின் உத்தியோகபூர்வ இலட்சனைகளைப் பயன்படுத்தி, நாளொன்றுக்கு 10,000 முதல் 50,000 ரூபாய் வரை வீட்டிலிருந்தே சம்பாதிக்க முடியும் என்று மக்களை ஏமாற்றி, போலியான விளம்பரங்கள் தயாரிக்கப்பட்டு சமூக வலைத்தளங்களில் பதிவேற்றப்பட்டுள்ளதாக இலங்கை கணினி அவசர தயார்நிலை குழுவின் மூத்த தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருகா தமுனுபொல தெரிவித்தார்.

அந்த விளம்பரங்களில் உள்ள இணைப்பைப் பயனர் கிளிக் செய்யும் போது, அது அதிகாரப்பூர்வ இலச்சினையை கொண்ட இணையதளத்திற்கு அல்ல, வேறு இணையதளத்திற்கு பயனரை அழைத்துச் செல்லும் என்று அவர் கூறினார்.

மேலும், இந்த விளம்பரங்கள் போலியான முகநூல் கணக்குகள் ஊடாக வெளியிடப்படுவதாகவும், அந்த இணையத்தளங்களுக்கு லிங்க்குகளை சொடுக்கி தமது தனிப்பட்ட கோப்புகளைப் பதிவேற்றம் செய்வதைத் தவிர்க்குமாறு இலங்கையர்களிடம் கோரிக்கை விடுத்தார்.

தொடர்ச்சி P2



## புத்தகயாவில்...

இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோர் புத்தகயாவிற்கு செவ்வாய்க்கிழமை (17) காலை சென்று சித்தார்த்த இளவரசர் ஞானம் பெற்ற இடத்தில் அமைந்துள்ள மகாவிகாரை மற்றும் ஸ்ரீ மகா போதி என்பவற்றைத் தரிசித்து ஆசி பெற்றுக்கொண்டார்.

## 1048 வேட்பாளர்களுக்கு எதிராக வழக்கு

கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டு செலவு அறிக்கையை சமர்ப்பிக்கத் தவறிய 1048 வேட்பாளர்களுக்கு எதிராக வழக்குத் தொடர தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இந்தக் குழு தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு அறிவிக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## ‘zoom’ யை விட்டுவிட்டு நேரடியாக சென்றது ஏன்?

விரிவாக்கப்பட்ட நிதி உதவி குறித்து சர்வதேச நாணய நிதியம் நிகழ்நிலை (zoom) செயலியின் மூலமாக விவாதம் நடத்த ஒப்புக்கொண்ட போதிலும், மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சக அதிகாரிகள் பெரும் தொகையை செலவிட்டு வொஷிங்டனுக்கு சென்றது ஏன் என்று புதிய ஜனநாயக முன்னணி (சிலிண்டர்) எம்.பி சாமர சம்பத் கேள்வி எழுப்பினார்..

தொடர்ச்சி P2

## “சவால் மிக்க பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன”

பாராளுமன்றம் இனம், மதம் என்ற வரையறைகளுக்கு அப்பாற்பட்டு நாட்டின் சகவாழ்வு மற்றும் மக்களின் அபிலாஷைகளை மேம்படுத்துவதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக செயற்படச் சகல உறுப்பினர்களின் ஒத்துழைப்பையும் எதிர்பார்ப்பதாக புதிய சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தெரிவித்தார்

தொடர்ச்சி P2

## “டயஸ் போராக்களின் விருப்பத்திற்கு செயற்படாதீர்கள்”

முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷவின் பாதுகாப்பைக் குறைத்து டயஸ்போராக்களின் விருப்பத்திற்கிணங்க செயற்படாதீர்கள். பாதாளக் குழுக்களும் மஹிந்த ராஜபக்ஷவும் ஒன்றல்ல என பொதுஜன பெரமுனவின் எம்.பியான சானக தெரிவித்த நிலையில் மஹிந்த ராஜபக்ஷவின் தென்னந்தோட்டங்களை பாதுகாக்க இராணுவத்தினரை வழங்கமுடியாதெனத் தேசிய மக்கள் சக்தி எம்.பிக்கள் தெரிவித்தனர். பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (17) இடம்பெற்ற பாடசாலை மாணவர்களுக்கான

தொடர்ச்சி P2





## புத்தகயாவில் தரிசனம்

இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க செவ்வாய்க்கிழமை (17) காலை புத்தகயாவிற்கு சென்று சித்தார்த்த இளவரசர் ஞானம் பெற்ற இடத்தில் அமைந்துள்ள மகாவிகாரை மற்றும் ஸ்ரீ மகா போதி என்பவற்றைத் தரிசித்து ஆசி பெற்றுக்கொண்டார்.

தொடர்ச்சி P2

## “தேவைப்பாடு ஏற்படாதவாறு நடந்து கொள்ள வேண்டும்”

மீண்டும் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை சமர்ப்பிக்க வேண்டிய தேவைப்பாடு ஏற்படாதவாறு நடந்து கொள்ள வேண்டுமென புதிய சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாட்டின் 10ஆவது பாராளுமன்றத்தின் சபாநாயகராக நவம்பர் 21ஆம் திகதி தெரிவு செய்யப்பட்ட அசோக ரன்வல ‘கலாநிதி’ பட்ட சர்ச்சையில் சிக்கிய நிலையில்,



தொடர்ச்சி P2



## “அரசாங்கத்தை வீழ்த்துவதோ எதிர்ப்பதோ நோக்கம் அல்ல”

இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கும் சம உரிமையுள்ளது. எனவே, அந்த சம உரிமைகள் தேசிய மக்கள் சக்தி அரசினால் உருவாக்கப்படவுள்ள புதிய அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்திய இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பியான இரா.சாணக்கியன், இந்த அரசை வீழ்த்துவதோ எதிர்ப்பதோ எமது நோக்கம் அல்ல. அரசின் முற்போக்கான நடவடிக்கைளுக்காகக் காத்திருக்கின்றோம் எனவும் கூறினார்.

தொடர்ச்சி P2

## “எம்.பிக்களின் பட்டங்களை நீக்க வேண்டும்”

**சம்பிரதாயத்தைப் பாதுகாக்க முடியுமாக இருக்க வேண்டும்**

பாராளுமன்ற உறுப்பினர்களை அழைக்கும் போது அவர்களின் பெயருக்கு முன்னால் உள்ள பட்டங்கள் தொடர்பான பகுதியை நீக்கி அழைக்க வேண்டும் என்று சர்வஜன பலய கட்சி பாராளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர சபையில் யோசனையை முன்வைத்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (17) புதிய சபாநாயகருக்கு வாழ்த்து தெரிவித்து உரையாற்றும் போதே அவர் இந்த யோசனையை முன்வைத்தார்.

அதன்போது அவர் மேலும் கூறுகையில்,

புதிய சபாநாயகருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



தொடர்ச்சி P2

## அர்ச்சுனாவின் எம்.பி பதவியை சவாலுக்கு உட்படுத்தி மனு

வைத்தியர் அர்ச்சுனா இராமநாதனின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை செல்லுபடியற்றதாக்குமாறு கோரி அபிநவ நிசபா பெரமுனவின் தலைவர் ஓஷல ஹேரத் தாக்கல் செய்த மனு அடுத்த வருடம் ஜனவரி 15ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான சோபித ராஜகருணா மற்றும் மகேன் கோபல்லவ ஆகியோர் அடங்கிய அமர்வு முன்னிலையில் மனு, செவ்வாய்க்கிழமை (17) பரிசீலிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2









தேசிய பட்டியல் உறுப்பினர்கள்

## நால்வர் சத்தியப்பிரமாணம்

10ஆவது பாராளுமன்றத்தில் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களாக நால்வர் பிரதிச் சபாநாயகர் ரிஸ்வி சாலி முன்னிலையில் செவ்வாய்க்கிழமை (17) பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

பாராளுமன்றம் பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி தலைமையில் செவ்வாய்க்கிழமை (17) காலை 9.30 மணிக்குப் கூடியது. இதன் பின்னர் ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தி தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களாக அர்ஜுன சுஜீவ சேனசிங்க, முகம்மது இஸ்மாயில் முத்து முஹம்மது,மனோகணேஷன் ஆகியோரும், புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக பைசர் முஸ்தபா ஆகியோரும் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர்.

பிரதிச் சபாநாயகர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் பாராளுமன்றசெயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஏட்டிலும் அவர்கள் கையொப்பமிட்டனர். கடந்த நவம்பர் 21ஆம் திகதி பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு இடம்பெற்றதுடன், அன்றைய தினம் புதிய உறுப்பினர்கள் பதவிப்பிரமாணம் செய்தனர். அதுவரை ஐக்கிய மக்கள் சக்திக்குக் கிடைத்த நான்கு தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கான பெயர் வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

தொடர்ச்சி P2

## புதிய சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன

**பிரதமர் மற்றும் சபை முதல்வரினால் சபாநாயகின் ஆசனத்துக்கு புதிய சபாநாயகர் அழைத்து செல்லப்பட்டார்**

நாட்டின் 10ஆவது பாராளுமன்றத்தின் புதிய சபாநாயகராகத் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜகத் விக்கிரமரத்ன ஏகமானதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

பத்தாவது பாராளுமன்றத்தின் சபாநாயகராகச் செயற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் அசோக ரன்வல அண்மையில் சபாநாயகர் பதவியிலிருந்து இராஜினாமா செய்ததன் காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்துக்கு வைத்திய கலாநிதி ஜகத் விக்கிரமரத்ன தெரிவு செய்யப்பட்டார்.

அதற்கமைய, பிரதமர் ஹரிணி அமரசூரியவினால் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜகத் விக்கிரமரத்னவின் பெயர் முன்மொழியப்பட்டதுடன், சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க அதனை வழிமொழிந்தார்.

புதிய சபாநாயகரை முன்மொழிந்து, வழிமொழிந்த பிரதமர் மற்றும் சபை முதல்வரினால் சம்பிரதாயபூர்வமாக புதிய சபாநாயகர் தனது ஆசனத்துக்கு அழைத்து செல்லப்பட்டார்.

அதன் பின்னர் புதிய சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பில் பிரதமர்



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “ஏமாற வேண்டாம்”

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் உத்தியோகபூர்வ இலச்சினை மற்றும் பெயருடன் பரப்பப்படும் விளம்பரங்கள் தொடர்பில் எமது பத்திரிகை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திடம் வினவியதுடன், அந்த விளம்பரங்கள் போலியானவை என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்தது.

இது சில குழுக்களால் மேற்கொள்ளப்படுவதாகவும், இவ்வாறான விளம்பரங்களுக்கு மக்கள் ஏமாற வேண்டாம் எனவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ இலச்சினைகளைப் பயன்படுத்தி மோசடி செய்யும் குழுவொன்று முகநூல் பக்கத்தில் போலியான விளம்பரங்களை வெளியிட்டுள்ளதாகவும் அதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் எதிர்காலத்தில் அந்த இணையதளங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

# “எம்.பிக்களின் பட்டங்களை நீக்க வேண்டும்”

புதிய சபாநாயகர் சுயாதீனமாகச் செயற்பட்டு பாராளுமன்றத்தின் கௌரவத்தைப் பாதுகாக்கவும், நீண்ட காலமாகப் பாதுகாத்த சம்பிரதாயத்தைப் பாதுகாக்க முடியுமாக இருக்க வேண்டும் என்று கேட்கின்றேன்.

இதேவேளை யோசனையொன்றை முன்வைக்க எதிர்பார்க்கின்றேன். சபாநாயகர் தொடர்பான பிரச்சினை ஏற்படுவதற்குக் காரணமாக இருந்த பின்னணி தொடர்பில் கவனத்தில் கொண்டும். மற்றைய விடயங்களைக் கருத்திற்கொண்டும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களுக்கு முன்னால் இருக்கும் கலாநிதி, பேராசிரியர், வைத்தியர் போன்ற தொழில் பட்டங்களைப் பயன்படுத்தி அழைப்பதை நீக்கினால் கீழ் நிலை அரசியலுக்கும் நல்லது. இல்லையென்றால் இது சமூகத்தில் தள்ளி வைப்பதைப் போன்றது. இங்கே பேராசிரியர் என்பது பல்கலைக்கழகத்திற்கும் வைத்தியர் என்பது வைத்தியசாலைக்குமே பொருந்தும்.

ஆனால், பாராளுமன்றத்தில் பல்வேறு தொழில் துறைகளைச் சேர்ந்தவர்கள் இருக்கின்றனர். இதனால் சபையில் ஒவ்வொருவரையும் அழைக்கும் போதும் பெயருக்கு முன்னால் இருக்கும் பகுதியை நீக்கினால் பொருத்தமாக இருக்கும் என்று யோசனையை முன்வைக்கின்றேன் என்றார்.

# நால்வர் சத்தியப்பிரமாணம்

கடந்த 12ஆம் திகதி இந்தப் புதிய பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் அடங்கிய வர்த்தமானியை தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டிருந்தது. இதற்கு அமைய நான்கு தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களில் மூவர் செவ்வாய்க்கிழமை (17) பதவிபிரமாணம் செய்தனர்.

அதேநேரம், புதிய ஜனநாயக முன்னணிக்குக் கிடைத்த தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு ஒருவருடைய பெயர்அறிவிக்க

**“ பாராளுமன்ற உறுப்பினராக பைஸர் முஸ்தபாவும் பதவிபிரமாணம் செய்துகொண்டார்**

ப்படாதிருந்ததுடன், குறித்த பதவிக்கான பெயர் கடந்த 11ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டது. இதற்கு அமைய அக்கட்சியின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக பைஸர் முஸ்தபாவும் பதவிபிரமாணம் செய்துகொண்டார்.

# புத்தகயாவில் தரிசனம்

பௌத்தர்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த புத்த பெருமானின் வாழ்க்கையுடன் தொடர்புள்ள மிகப் புனிதமான நான்கு இடங்களில் ஒன்றாக புத்தகயா காணப்படுவதோடு 2002 ஆம் ஆண்டு புத்தகயா மகாவிகாரை உலக மரபுரிமையாக யுனொஸ்கோவினால் பிரகடனம் செய்யப்பட்டது.

இந்திய மகாபோதி சங்கத்தின் பொதுச் செயலாளர் வண. பெலவத்தே சீவலி தேரர் மற்றும் சாரநாத் மையத்தின் விகாராதிபதி வண. ரத்மல்வல சுமித்தானந்த தேரர் ஆகியோர் இதன்போது ஜனாதிபதிக்கு ஆசிர்வாதம் வழங்கினர்.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ ஆகியோரும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.

# “தேவைப்பாடு ஏற்படாதவாறு நடந்து கொள்ள வேண்டும்”

இராஜினாமா செய்ததையடுத்து, செவ்வாய்க்கிழமை (17) பாராளுமன்றம் கூடிய நிலையில், புதிய சபாநாயகராக ஜகத் விக்கிரமரத்ன தெரிவு செய்யப்பட்டார்.

அவர்க்கு வாழ்த்துக்கூறி உரையாற்றுகையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் உரையாற்றுகையில், பாராளுமன்றத்தின் உரிமைகளைப் பாதுகாத்துக் கொண்டு, மக்களுக்கு மேலும் உகந்த சேவையை வழங்குவதில் சபாநாயகருக்குத் தனித்துவமான வகிபங்கு உண்டு. 225 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தரமான அரச சேவையை வழங்குவதில் சபாநாயகரின்

**“ எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைச் சமர்ப்பிக்க வேண்டிய தேவைப்பாடு ஏற்படாதவாறு நடந்து கொள்ள வேண்டும்**

பாத்திரம் தனித்துவமானது சகல உறுப்பினர்களினதும் கருத்துக்களையும் முன்மொழிவுகளையும் வேறுபாடின்றி கேட்பதன் மூலம், ஜனநாயகத்தை வலுப்படுத்துவதில் முக்கிய பங்காளராகச் சபாநாயகர் மாறுகிறார். முன்னாள் சபாநாயகரைப் போன்று நடந்து கொள்ளாது பணியைச் சிறப்பாக முன்னெடுக்க வேண்டும். மீண்டும் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைச் சமர்ப்பிக்க வேண்டிய தேவைப்பாடு ஏற்படாதவாறு நடந்து கொள்ள வேண்டும் என்றார்.

# “டயஸ் போராக்களின் விருப்பத்திற்கு செயற்படாதீர்கள்”

காகிதாதிகளுக்கான குறை நிரப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றிய பொதுஜன பெரமுனவின் எம்.பியான சானக, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‌ஷவுக்கான பாதுகாப்பு இல்லாது செய்யப்பட்டுள்ளது. அவரின் பாதுகாப்பை நீக்கியுள்ள இந்த அரசு தற்போது மஹிந்த ராஜபக்‌ஷவின் பாதுகாப்புக்கு இராணுவத்தை வழங்க முடியாது எனவும் 60 பொலிஸாரை மட்டுமே வழங்க முடியும் எனவும் கூறுகின்றது.

இந்த நாட்டில் யுத்தத்தை முடித்து வைத்தவர் மஹிந்த ராஜபக்‌ஷ. யுத்தம் நடந்தபோது 5 நிமிடங்களுக்கு 30 கோடி ரூபா செலவானது. இன்று அந்த நிலை இல்லை. அவ்வாறான நிலையில் யுத்தத்தை முடித்து இந்த நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்திய மஹிந்த ராஜபக்‌ஷவுக்கு உங்களினால் 30 கோடி ரூபாய் செலவிட முடியாதா?பாதாளக்குழுத் தலைவர்களுக்கே பலர் பாதுகாப்பு வழங்கும் நிலையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‌ஷவுக்கு பாதுகாப்பு வழங்க முடியாதா? மஹிந்த ராஜபக்‌ஷவை பாதாளக்குழுத்தலைவர்களுடன் ஒப்பிட வேண்டாம். முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு வழங்கும் பாதுகாப்பை மஹிந்த ராஜபக்‌ஷவுக்கும் வழங்குவதற்கு இருவரும் ஒன்றல்ல. மஹிந்த ராஜபக்‌ஷ யுத்தத்தை முடித்தவர். ரணில் அப்படப்பட்டவரல்ல.

எனவே,முன்னாள்ஜனாதிபதி ராஜபக்‌ஷவின் பாதுகாப்பைக் குறைத்துடயஸ் போராக்களின்விருப்பத்திற்கிணங்கசெயற்படாதீர்கள்என்றார்.

இதனால் விசனமடைந்த தேசிய மக்கள் சக்தி எம்.பிக்கள் எழுந்து, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‌ஷவின் பாதுகாப்புக்கு வழங்கப்பட்ட இராணுவத்தினர் மஹிந்த ராஜபக்‌ஷவின் தென்னம் தோட்டங்களைப் பாதுகாக்கத்தான் பயன்படுத்தப்பட்டார்கள். வீட்டு வேலைக்குப் பயன்படுத்தப்பட்டார்கள். வளவுகளைத் துப்புரவாக்கப் பயன்படுத்தப்பட்டார்கள். அப்படி இராணுவத்தினரைப் பயன்படுத்த அனுமதிக்க முடியாது என்றனர். இதனால் இருதரப்புக்குமிடையில் சிறிது நேரம் கடும் தர்க்கம் ஏற்பட்டது.

# புதிய சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன

ஹரிணி அமரசூரிய மற்றும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட கட்சித் தலைவர்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

இதன்போது பிரதமர் ஹரிணி அமரசூரிய வாழ்த்து தெரிவித்து உரையாற்றுகையில், 10ஆவது பாராளுமன்றத்திற்குச் சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பில் உங்களை நாங்கள் வாழ்த்துகின்றோம். நீங்கள் இந்தப் பதவிக்கு மிகவும் பொருத்தமானவர் என்று நம்புகின்றோம். மக்கள் எதிர்பார்க்கும் ஒழுக்கம் மிக்க பாராளுமன்றத்தை உருவாக்க நீங்கள் செயற்படுவீர்கள் என்ற நம்பிக்கையும் உள்ளது என்றார்.

# அர்ச்சுனாவின் எம்.பி பதவியை சவாலுக்கு உட்படுத்தி மனு

இந்த மனுவின் பிரதிவாதிகளாக பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி அர்ஜுன ராமநாதன் மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினரான வைத்தியர் அர்ஜுன ராமநாதன் பாராளுமன்றத்திற்கு போட்டியிடும் போது அரசாங்க வைத்தியராக கடமையாற்றி வந்தார்.

பாராளுமன்றத் தேர்தல் சட்டம் மற்றும் பிற அரசியலமைப்புச் சட்டங்களின்படி, பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் போது தனது பதவியை ராஜினாமா செய்திருக்க வேண்டும், ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை என மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

# “சவால் மிக்க பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன”

10ஆவது பாராளுமன்றத்தின் சபாநாயகராக நவம்பர் 21 ஆம் திகதி தெரிவு செய்யப்பட்ட அசோக ரன்வல ‘கலாநிதி’ பட்ட சர்ச்சையில் சிக்கிய நிலையில் இராஜினாமா செய்ததையடுத்து, செவ்வாய்க்கிழமை (17) பாராளுமன்றம் கூடிய நிலையில், புதிய சபாநாயகராக ஜகத் விக்கிரமரத்ன தெரிவு செய்யப்பட்டார்.

இதனைத்தொடர்ந்து, கட்சித்தலைவர் அவருக்கு வாழ்த்து தெரிவித்து உரையாற்றினர். அதற்கு நன்றி தெரிவித்தது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறுகையில், பாராளுமன்றத்தின் சபாநாயகராக என்னைத் தெரிவு செய்தமைக்கும், வாழ்த்து தெரிவித்தமைக்கும் சகல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டு மக்களின் எதிர்பார்ப்பு மற்றும் எதிர்பார்ப்பு ஆகியவற்றை நிறைவேற்றுவதற்கு கடந்த காலங்களை விடவும் இந்த பாராளுமன்றத்துக்குக் கூடுதல் பொறுப்புள்ளது.

அரசியலமைப்பின் ஏற்பாடுகள், பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகள் மற்றும் முன்னாள் சபாநாயகர்களின்

**“ சகவாழ்வு மற்றும் மக்களின் அபிலாஷைகளை மேம்படுத்துவதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகச் செயற்பட வேண்டும்**

எடுத்துக்காட்டான செயற்பாடுகளுக்கு அமையப் பக்கச்சார்பற்ற வகையில் செயற்படுவதுடன், சவால் மிக்க பொறுப்புக்கள் சபாநாயகர் பதவிக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பதை நான் நன்கறிவேன்.

சட்டவாக்கத்துறையின் கடமைகளைச் சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கு அனைத்து உறுப்பினர்களின் ஒத்துழைப்புக்களையும் எதிர்பார்க்கிறேன். மக்கள் பிரதிநிதி என்ற வகையில் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் உரிமைகளையும், சிறப்புரிமைகளையும் பாதுகாப்பேன் என்று வாக்குறுதியளிக்கிறேன்.

பத்தாவது பாராளுமன்றம் இனம், மதம் என்ற வரையறைகளுக்கு அப்பாற்பட்டு நாட்டின் சகவாழ்வு மற்றும் மக்களின் அபிலாஷைகளை மேம்படுத்துவதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகச் செயற்பட வேண்டும். இதற்குச் சகல உறுப்பினர்களின் ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கிறேன் என்றார்.

# “அரசாங்கத்தை வீழ்த்துவதோ எதிர்ப்பதோ நோக்கம் அல்ல”

பாராளுமன்றத்தில்செவ்வாய்க்கிழமை (17)இடம்பெற்றஜனாதிபதியின்கொள்கை விளக்க உரைமீதான இரண்டாம்நாள்விவாதத்தில் உரையாற்றுகையிலேயேஇவ்வாறுதெரிவித்தஅவர்மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும்உரையாற்றுகையில், தேசிய மக்கள் சக்திக்கு எவ்வாறு நாடு முழுவதும் மக்கள் ஆணை கிடைத்ததோ அதேபோன்று வடக்கு கிழக்கில் தமிழரசுக் கட்சிக்கே மக்கள் ஆணை கிடைத்துள்ளது. அத்துடன் அநுர சுனாமியை எமது மட்டக்களப்பு மாவட்டம் மட்டமே தைரியமாக எதிர்த்து நின்றது. அதனால்தான் அங்கு நாம் வரலாற்று வெற்றியைப்பெற்றோம்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் உள்ளன. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ், கைது செய்யப்பட் ட அரசியல் கைதிகள் இன்னும் விடுவிக்கப்படவில்லை. அரசியல் கைதிகளை உடனடியாக விடுவிக்க வேண்டும். எனினும் இப்போது பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் பயன்படுத்தப்படுகின்றது எனவே அரசு உடனடியாக இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்.

இதேவேளை, காணாமல் போனோரின் உறவுகளுக்கு நீதி கிடைக்க வேண்டும். தமிழ்மக்களுக்குஎதிராகஇந்தக்குற்றத்தைசெய்தோர்தண்டிக்கப்படவேண்டும். இவ்விடயம்தொடர்பில்அரசுவகைப்பொறுப்புக்கூறவேண்டும்என்பதுடன்அரசின்நிலைப்பாட்டையும்அறிவிக்கவேண்டும்.

மகாவலி அதிகாரசபை, தொல்பொருள் திணைக்களம் போன்றவற்றால் சிங்கள மக்களுக்கு எந்தவிதமான பாதிப்புக்களும் இல்லை .ஆனால் வடக்கு,கிழக்கு மாகாணங்களிலுள்ள 8 மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ் மக்களும் இவற்றால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, தமிழ் மக்களின் காணிப் பிரச்சினைகள் உடனடியாக தீர்க்கப்பட வேண்டும். படையினர் வசமுள்ள காணிகள் விடுவிக்கப்பட வேண்டும்.

தமிழ் மக்களின் காணிகளிலுள்ள இராணுவ முகாம்கள் அகற்றப்பட வேண்டும் இந்த அரசு மூடப்பட்டிருந்த சில வீதிகளைத் திறந்துள்ளது அதனை வரவேற்கின்றோம். இன்னும் முன்னேற்றகரமான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும்.

மாகாணசபைகள் என்பது முக்கியமானவை.13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் ரில்வின் சில்வா தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ ஊடகசந்திப்பில் தெளிவு படுத்தியுள்ளதால் அது தொடர்பில் நான் மேலும் பிரஸ்தாபிக்கவில்லை. ஆனால் இந்த அரசு உருவாக்கவுள்ள புதிய அரசியலமைப்பில் தமிழ் மக்களுக்கான அனைத்து உரிமைகளும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கும் சம உரிமையுள்ளது எனவே அந்த சம உரிமைகள் புதிய அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் எம்மிடம் தகவல்கள் உள்ளன. நீங்கள் பிள்ளையானை அழைத்து விசாரித்தீர்கள், பின்னர் எதனையும் காணமுடியவில்லை. இந்த தாக்குதல் தொடர்பில் பாராளுமன்றத்தில் கூட நாம் பல தகவல்களை முன்வைத்துள்ளோம். பிள்ளையான் செய்த விடயங்கள் தொடர்பிலும் நாம் கூறினோம். ஆனால் முன்னைய அரசுகள் எதனையும் செய்யவில்லை. அண்ணல் நீங்கள் செய்ய வேண்டும்.

அத்துடன், மதுபானசாலை அனுமதிகள் தொடர்பில் பிரச்சினைகள் உள்ளன. வடக்கு அரசியல்வாதிகளும் பெற்றுள்ளார்கள் என்று கூறப்படுகின்றது. அந்த அனுமதிகளைப் பெற்றவர்களின் பட்டியலை ஏன் இதுவரை நீங்கள் வெளியிடவில்லை. அவ்வாறானவர்களை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

இந்த அரசை வீழ்த்துவதோ எதிர்ப்பதோ எமது நோக்கம் அல்ல. அரசின் முற்போக்கான நடவடிக்கைகளுக்காகக் காத்திருக்கின்றோம் என்றார்.

# ‘zoom’ யை விட்டுவிட்டு நேரடியாக சென்றது ஏன்?

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (17) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்திலேயே சாமர சம்பத் எம்.பி. இவ்வாறு கேள்வி எழுப்பினார்

சமீபத்தில் அமெரிக்காவின் வொஷிங்டன் நகரில் சர்வதேச நாணய நிதியத்துடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை இவர்களின் பயணத்திற்காகச் செலவிடப்பட்ட தொகை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் சாமர சம்பத் எம்.பி. கேள்விகளை எழுப்பினார்.

இதற்குப்பதிலளித்தபிரதிநிதிஅமைச்சர்கலாநிதிஹர்ஷனசூரியப்பெரும,வொஷிங்டனில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் கலந்துரையாடலில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நான்கு அதிகாரிகளும் மத்திய வங்கியின் ஐந்து அதிகாரிகளும் கலந்துகொண்டனர் அதனைத் தொடர்ந்து வொஷிங்டனில் இடம்பெற்ற கலந்துரையாடல்களில் பங்கேற்பதற்கான தீர்மானம் அரசாங்கம் மற்றும் ஐ.எம்.எப். இடையே ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்டது..

கலந்துரையாடல்களின் சிக்கலான தன்மை, சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் நடத்தத் திட்டமிடப்பட்ட கலந்துரையாடல்களின்எண்ணிக்கைஆகியவற்றின்காரணமாகவொஷிங்டன்கலந்துரையாடலில்பங்கேற்கஅரசாங்கம்தீர்மானித்தது.

கலந்துரையாடலின்ஒரு பகுதியைவொஷிங்டனில் நடத்தசர்வதேசநாணயநிதியமும்அரசாங்கமும்ஒப்புக்கொண்டனமற்றையபாதிகலந்துரையாடல்களுக்குஐ.எம்.எப். குழுஇலங்கைக்குவரஒப்புக்கொண்டது.

அதிகாரிகளின்விமானசெலவுக்காக 7.05 மில்லியன்ரூபா செலவிடப்பட்டது. 38,587 டொலர்கள்பயணசெலவுக்கு செலவிடப்பட்டது. நிதிஅமைச்சின்அதிகாரிகள்விமானத்தில் வணிகவகுப்பில்பயணிக்கவில்லைஎன்றார்.

“தமிழர்களும் முஸ்லிம்களும்

# ஒரே மேடையில் இருந்து பேசவேண்டும்”

நூருல் ஹுதா உமர்



“ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்கவின் இந்திய விஜயத்தை தொடர்ந்து நாடு பூராகவும் புரையோடிப்போன பிரச்சினைகளுக்கு சமஸ்டி தீர்வு முன்வைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் எழுந்த வண்ணமுள்ளது. எமது நாட்டில் தீர்க்கப்படாமல் பல பிரச்சினைகள் பல தசாப்தங்களாக தேங்கி கிடக்கிறது. அவற்றுக்கு ஒரு தீர்வு பொறி முன்வைக்கப்பட வேண்டும் என்றால் அரசாங்கத்துடன் தமிழர் தரப்பும், முஸ்லிம் தரப்பும் ஒரே மேடையில் இருந்து பேசி தீர்க்க வேண்டும்” என கிழக்கின் கேடயம் பிரதானியும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினருமான எஸ்.எம். சபீஸ் தெரிவித்தார்.

செவ்வாய்க்கிழமை (17) அன்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், “ஒரு தீர்வு பொறி முன் வைக்கப்பட வேண்டியது, சில நாடுகளின் அழுத்தத்தினாலோ அல்லது சில குழுக்களின் தேவைகளுக்காகவோ தீர்மானிக்க முடியாது. பேச்சுவார்த்தைகளின் போது கட்டாயம் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் அந்த பேச்சுவார்த்தை மேசையில் இருக்க வேண்டும். அதனூடாக தான் யாருக்கும் பாதகமில்லாத தீர்வை பெற முடியும். யாருக்காவது நியாயமான தீர்வுகள் கிடைக்காத போது அது இன்னொரு போராட்டத்தை நோக்கி இழுத்துச் சென்றுவிடும் என்பதில் மாற்றுக் கருத்துகள் இல்லை.

பாசிஸ புலிகளின் கொள்கையிலிருந்து மாறாதவர்கள் வடக்கும் கிழக்கும் இணைய வேண்டும், தமக்கு மட்டும் சமஸ்டி தீர்வு கிட்ட வேண்டும், இணைந்த வடகிழக்கில் சமஸ்டி என்றெல்லாம் பேசுகிறார்கள். இன்று உலகம் நவீனத்துவமடைந்து எவ்வளவு தூரம் வளர்ந்து விட்டது. இலங்கையை பொறுத்தமட்டில் ஒற்றையாட்சி போதுமானது. இங்கு காணப்படும் வருமான ஏற்றத்தாழ்வை இல்லாமலாக்கி சகல குழந்தைகளும் ஒரே மொழியில் கல்வி கற்றால், எல்லோரையும் சமமாக நடத்தும் திருத்தம் அரசியல் அமைப்பில் கொண்டுவரப்பட்டால் பெரும்பாலான பிரச்சனைகள் தீர்ந்து விடும்.

மூன்று தசாப்த போராட்டத்திற்கு ஒரு தீர்வை வழங்க வேண்டும் என்றால் அங்கு ஒரே மேசையில் பேசி தீர்வுகள் எட்டப்பட வேண்டும். கடந்த காலங்களில் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்ட போதும் கிழக்கு மாகாண பள்ளிவாசல்கள், பொது நிறுவனங்கள் சம்மேளனத்தினூடாக நாங்கள் அதை வலியுறுத்தினோம். பேச்சுவார்த்தை என்று வருகின்ற போது அரசாங்கமும், தமிழர்களும், முஸ்லிம்களும் சமமாக இருந்து பேச வேண்டும்” என்றார்.

## நோய் காவு வண்டி – பேருந்து விபத்து ; மூவர் காயம்

வ.சக்தி



மட்டக்களப்பிலிருந்து களுவாஞ்சிகுடி நோக்கி பயணித்துக் கொண்டிருந்த நோய் காவு வண்டி (ஆம்புலன்ஸ்) அதே திசையில் வந்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்தில் மோதி மூவர் காயமடைந்த சம்பவம் செவ்வாய்க்கிழமை(17) காலை இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் இரு வாகனங்களிலும் பயணித்தவர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளதுடன், நோய் காவு வண்டியில் பயணித்த சாரதி உட்பட மூன்று பேர் காயமடைந்து களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த நோய் காவு வண்டியில் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இருந்து புறப்பட்டு, களுவாஞ்சிகுடியில் நடைபெறவுள்ள கூட்டம் ஒன்றுக்காக சென்றவேளையிலேயே இவ்விபத்து சம்பவித்துள்ளதாக தெரியவருகின்றது.

எனினும் நோய் காவு வண்டியின் முன் பகுதிக்கும் பேருந்தின் பின் பகுதியிலும் சேதம் ஏற்பட்டுள்ளதுடன் விபத்து தொடர்பில் களுவாஞ்சிகுடி போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



## கரி ஆனந்தசங்கரியை சந்தித்த குகதாசன்

ஏ.எச் ஹஸ்பர்

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கதிரவேலு சண்முகம் குகதாசன் , கனேடிய நடுவண் அரசின் பழங்குடி மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் (Minister of Crown – Indigenous Relations) கரி ஆனந்தசங்கரியை சந்தித்து இலங்கைத் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறுபட்ட சிக்கல்களைப் பற்றி கலந்துரையாடியுள்ளார்.

## ACWF துணைத் தலைவர், பிரதமருடன் சந்திப்பு



அனைத்து சீன பெண்கள் சம்மேளனத்தின் (ACWF) துணைத் தலைவியான சாங் டோங்மேய், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை பிரதமர் அலுவலகத்தில் சந்தித்து, பெண்கள் வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான பரஸ்பர முயற்சிகள் குறித்து கலந்துரையாடினார்.

சாங் டோங்மேய் மற்றும் அவரது தூதுக்குழுவினரை வரவேற்ற பிரதமர் கலாநிதி அமரசூரிய, இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான நீடித்த நட்புறவைப் பாராட்டினர். இந்த கலந்துரையாடல் பெண்களின் சுகாதாரம், கல்வி மற்றும் பொருளாதாரப் பங்கேற்பு ஆகியவற்றில் பகிரப்பட்ட சவால்கள் மற்றும் வாய்ப்புகளை மையமாகக் கொண்டிருந்தது. பெண்களின் தொழிற்படை ஈடுபாடு மற்றும் கீழ்மட்ட பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது உட்பட சீனாவின் முன்னேற்றங்கள் குறித்து திருமதி சாங் டோங்மேய் விளக்கினார்.

இலங்கைக்கான சீனத் தூதுவர் Qi Zhenhong அவர்கள் உட்பட இலங்கை சீனத் தூதரகத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் இலங்கைக் குழுவில் பிரதமரின் செயலாளர் திரு.பிரதீப் சபுதந்திரி, பிரதமரின் மேலதிக செயலாளர் திருமதி சாகரிகா போகஹவத்த, வெளியுறவு அமைச்சின் கிழக்கு ஆசியாவிற்கான பணிப்பாளர் நாயகம் ருவந்தி தெல்பிட்டிய மற்றும் கிழக்கு ஆசியப் பிரிவின் பணிப்பாளர் மதிதி உதானி குணவர்தன ஆகியோர் இந்நிகழ்வில் பங்குபற்றினர்.

## கலாபூஷன் விருது வழங்கி கௌரவிப்பு



பி.கேதீஸ்

நுவரெலியாவைச் சேர்ந்த சந்திரசிறி மஹாகம பல துறைகளில் சிறந்து விளங்கியதற்காக அரச கலாபூஷன் விருது வழங்கும் விழாவில் கலாபூஷன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

ஓவியர், அரசியல் கார்ட்டூனிஸ்ட், நாவலாசிரியர், ஓவிய வடிவமைப்பாளர், பத்திரிகையாளர் என கலைத்துறையின் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பை பாராட்டி நுவரெலியாவைச் சேர்ந்த சந்திரசிறி மஹாகமவுக்கு இந்த ஆண்டுக்கான அரச கலாபூஷண் விருது வழங்கப்பட்டுள்ளது.

புத்த சாசனம், சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் இணைந்து 39வது தடவையாக கலாபூஷன் அரச விருது வழங்கும் விழாவை புத்தசாசன அமைச்சர் பேராசிரியர் ஹினிதும சுனில் செனவி தலைமையில் அராலியகஹா மன்றில் நடைபெற்றது.

## வாகன பற்றரிகள் திருட்டு; இருவர் கைது





க. அகரன்

வவுனியா, நெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேப்பங்குளம் பகுதியில் அமைந்துள்ள வாகன தரிப்பிடம் ஒன்றில் வாகன பற்றரிகளை தொடர்ச்சியாக திருடிய குற்றச்சாட்டில் இருவரை கைது செய்துள்ளதாக நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வாகன தரிப்பிடத்தில் வாகன பற்றரிகள் களவாடப்பட்டுள்ளதாக நெளுக்குளம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸாரால் நான்கு வாகன பற்றரிகளுடன் இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் குறித்த குற்றச்செயலுக்கு பயன்படுத்தபட்டதாக சந்தேகிக்கப்படும் முச்சக்கரவண்டி ஒன்றினையும் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் முன்னெடுக்கப்படும் மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்களை வவுனியா நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்குரிய நடவடிக்கையினை முன்னெடுத்து வருவதாக நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

## கடல் அலையிலிருந்து காப்பாற்றப்பட்ட ரஷ்ய பிரஜைகள்

ஹிக்கடுவை கடலில் நீராடிக் கொண்டிருந்துள்ள நிலையில் அடித்துச் செல்லப்பட்ட நான்கு ரஷ்ய பிரஜைகள் ஹிக்கடுவை பொலிஸ் உயிர்காப்பு பிரிவினரால் காப்பாற்றப்பட்டுள்ள சம்பவம் திங்கட்கிழமை (16) இடம்பெற்றுள்ளது.

ஒரே குடும்பத்தை சேர்ந்த 40 வயதுடைய நபரும் 39 வயதுடைய பெண்ணும் , 07 மற்றும் 13 வயதுடைய இரு சிறுமிகளுமே இவ்வாறு காப்பாற்றப்பட்டுள்ளனர்.

ஹிக்கடுவை பொலிஸ் நிலையத்திற்குட்பட்ட பொலிஸ் உயிர்காப்பு பிரிவின் பொலிஸ் பரிசோதகர் ஹேவகே, பொலிஸ் கான்ஸ்டபிள் 96793 ஏக்கநாயக்க, பொலிஸ் கான்ஸ்டபிள் 102748 திஸாநாயக்க மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் 105456 ஜயசிங்க ஆகியோரால் இவர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர்.









## வருடாந்த ஒளிவிழா

எம். எஸ். எம். நூர்தீன்

மட்டக்களப்பு – கல்லடி டச் பார் புனித இஞ்ஞாசியார் ஆலய மறை பாடசாலையின் வருடாந்த ஒளிவிழா பங்குத்தந்தை அருட்பணி லோரன்ஸ் லோகநாதன் அடிகளார் தலைமையில் திங்கட்கிழமை (16) மிகச்சிறப்பாக நடைபெற்றது.

ஒளி விழாவின் பிரதம அதிதியாக கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும் அருட்தந்தையுமான நவரெட்ணம் (நவாஜி) அடிகளார் கலந்து சிறப்பித்த நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக அருட்தந்தை இயேசு சபைத்துறவி அனிஸ்டன் மொராய்ஸ், இயேசு சபைத்துறவி அருட்தந்தை ஜோசப் மேரி, அருட்சகோதரர் பிரதீபன், முன்னால் பங்குத்தந்தை சுவைக்கின் ரொசான் அடிகளார் உள்ளிட்ட மேலும் பல அருட்தந்தையர்களும், அருட்சகோதரிகளும், அருட்சகோதரர்களும் கலந்து சிறப்பித்தனர். மேலும் இந்நிகழ்வில் பங்கு மேற்புப்பணிச்சபை உறுப்பினர்கள் மற்றும் மறைக்கல்வி மாணவர்கள், பங்கு மக்கள், அயல் பங்கு மக்கள் என பலரும் இணைந்து சிறப்பித்தனர்.

நிகழ்வில் மறைக்கல்வி மாணவர்களின் கலைப்படைப்புக்கள் அரங்கை அலங்கரித்திருந்ததுடன், அதிதிகள் உரை இடம்பெற்று, தேசிய ரீதியில் விவிலிய போட்டியில் சாதனை படைத்த மாணவர்களுக்கும், மறைக்கல்வி மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கிவைக்கப்பட்டது.


ஒளிவிழாவினை சிறப்பாக நடாத்தி முடித்த மறையாசிரியர்கள் மற்றும் மறைக்கல்வி மாணவர்களுக்கும் பங்கு மக்கள் சார்பில் பங்குத்தந்தை தனது பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்திருந்தார்.











# மோசடியாளர்கள் தொடர்பில் மக்கள் விழிப்பாக இருக்கவும்

ஏமாற்றுபவர் மிகவும் இலகுவாக ஏமாந்து விடுகின்றனர். ஏமாற்றுகின்றவர்கள் நன்கு திட்டமிட்டு, மிக கன கச்சிதமாக செய்து முடித்து விடுகின்றனர். அதற்காக பல வழிகளையும் கையாண்டு கொண்டுதான் இருக்கின்றனர். எனினும், ஏமாறுபவர் ஏமாந்து கொண்டுதான் இருக்கின்றனர்.

இதில், ஈஸி கேஸ் மூலம் ஏமாந்தவர்கள் ஏராளம். அத்துடன், பிரமிட் திட்டத்தின் ஊடாக ஏமாந்தவர்களும் ஏராளம். எனினும், நினைத்து பார்க்க முடியாத அளவுக்கு பணம் கிடைக்குமென நினைத்து ஏமாந்து விடுகின்றனர். இது நமது நாட்டில் மட்டுமன்றி உலகளாவிய ரீதியில் தனியொருவரால் அல்லது குழுவினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

யாசகத்தில் ஈடுபடும் பலரும் யாசகர்கள் அல்ல என்றும், தங்களுடைய பிள்ளைகள் அல்லது உறவினர்களுக்கு மருத்துவ உதவி கோரும் பலரும் உண்மையாக உதவி தேவைப்படுபவர்கள் இல்லை என்பதெல்லாம் கடந்த கால கசப்பான உண்மைகளாகும். எனினும், பஸ்களில் உதவிக்கேட்டு ஏறும் பலரும் ஏமாற்று பேர்வழிகளாகவே உள்ளனர்.

நாட்டில் யாசகத்தில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கையில் அண்மைக்காலமாக அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக பொது போக்குவரத்து சாதனங்களான ரயில், பஸ் உட்பட மதவழிபாட்டுத் தலங்களின் வாசல்கள் என மக்கள் அதிகளவில் காணப்படும் இடங்களில் யாசகத்தில் ஈடுபடுபவர்களை அதிகளவில் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

சிறுவர்கள், வளர்ந்தவர்கள் ஆண்கள், பெண்கள், விசேட தேவையுடையவர்கள், நோயாளர்கள், கர்ப்பிணிப் பெண்கள் என்று எல்லா மட்டத்தினரும் இச்செயலில் ஈடுபடுவதை காண முடிகிறது. சிலர் குடும்பமாக இச்செயலில் ஈடுபடக் கூடியவர்களாக உள்ளனர். அவர்களில் பாடசாலை வயதை உடைய பிள்ளைகளும் உள்ளனர். ஆனால் பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்கள் உள்ளிட்ட சிறுவர்களை யாசகத்தில் ஈடுபடுத்துவது எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாததாகும்.

அவ்வாறு யாசகம் செய்வோரில் பலரும் அன்றாட வாழ்விற்கு தேவையான வசதி வாய்ப்புகளை கொண்டிருப்பவர்களும் இச்செயலில் ஈடுபடுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அவர்களது வங்கிக் கணக்கில் அளவுக்கு அதிகமான பணம் காணப்படுவதாகவும் சொத்துகளைக் கொண்டவர்களாக இருப்பதாகவும் கூறப்படுகிறது. இவ்வாறானவர்களின் செயற்பாட்டினால் உண்மையாகவே சீவனோபாயத்திற்கான வருமானத்தை தேடிக்கொள்ளும் நோக்கில் யாசகத்தில் ஈடுபடுபவர்கள் பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


இந்நிலையில், ஒரு சில அமைப்புகளின் பெயர்களை பயன்படுத்தி தனிநபர்களும் இவ்வாறான மோசடி செயற்பாடுகளில் ஈடுபடுவோரும் உள்ளனர். இதேவேளை, இலங்கையின் மத்திய வங்கி, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மற்றும் இலங்கையின் முன்னணி நிறுவனங்களின் உத்தியோகபூர்வ இலட்சனைகளைப் பயன்படுத்தி, மோசடியில் ஈடுபடுவோர் தொடர்பில் விழிப்பாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பண்டிகை காலம் என்பதால், இவ்வாறான மோசடிகளில் தொடர்பில் மிக மிக அவதானமாக இருக்க வேண்டும். இல்லையில், இருப்பவற்றையும் இழக்க நேரிடும், நவீன இலத்திரனியல் சாதனங்களை பயன்படுத்துவோர், அதில், தேவையில்லாம் வரும் லிங்குகளை சொடுக்கி விடாமல் இருந்தாலேயே பல பிரச்சனைகளுக்கு தீர்வு காணலாம்.

எனவே, மக்கள் விழிபாகவே இருக்கவேண்டும். இல்லையேல் ஏமாற்றுபவர்கள் தங்களின் கைவரிசையை காண்பித்துகொண்டுதான் இருப்பார்கள்.






# சபாநாகரின் பட்டப் பிரச்சினை மக்களின் பிரச்சினை அல்ல



எம்.எஸ்.எம். ஐயூப்

தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் நிறுவப்பட்டு ஒரு மாதம் முடிவடைவதற்குள் அது முக்கிய பிரச்சினையொன்றை எதிர்நோக்கியிருக்கும் சபாநாயகர் அசோக ரங்வல தமது பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

நாட்டுக்கோ மக்களுக்கோ எவ்வித பயனுமில்லாத ஒரு விடயத்தின் காரணமாகவே அவர் பதவி துறந்துள்ளார்.

ரங்வலயின் பெயருக்கு முன்பாக கலாநிதி என்ற பட்டம் நீண்ட காலமாகவே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. ஆயினும் அவருக்கு உலகில் எந்தவொரு பல்கலைகழகத்தாலும் கலாநிதிப் பட்டம் வழங்கப்படவில்லை என்று எதிர்க் கட்சியினர் கோஷமிட்டதை அடுத்தே அவர் தமது பதவியை இராஜிநாமா செய்துள்ளார்.

இதனை அடுத்து இப்போது எதிர்க் கட்சியினர் மேலும் சில ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் போலி பட்டங்களை தமது பெயருடன் சேர்த்து பாவிப்பதாக குற்றஞ்சாட்ட ஆரம்பித்துள்ளனர். ஆளும் கட்சியினர் மக்களுக்கு உண்மைக்கு புறம்பானதைக் கூறியே பதவிக்கு வந்துள்ளனர் என்று காட்டுவதே அவர்களது முயற்சியாக இருக்கிறது.

ரங்வலவுக்கு கலாநிதி பட்டம் இல்லை என்ற சர்ச்சையை யார் ஆரம்பித்தார் என்பது இன்னமும் தெளிவில்லை.

ஆனால் தே.ம.ச பதவிக்கு கொண்டுவர மக்கள் அபிப்பிராயத்தை கட்டியெழுப்புவதில் தீவிரமாக ஈவ்டுபட்ட பேராசிரியர் நிர்மால் ரஞ்சித் தேவசிறி மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய ஆகியோரே ஆரம்பத்தில் இந்த விடயத்தை முகநூலில் பெரிதாக எடுத்துரைக்கலாயினர். அதனை அடுத்தே இது பாரிய அரசியல் பிரச்சினையாகியது.

இலங்கையில் அரசியலுக்கு கல்வித் தகைமை தேவை இல்லை என்பதை சகலரும் அறிவர். எனவே சபாநாயகராவதற்கும் கல்வித் தகைமை அவசியமில்லை.

அவர் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக இருந்தால் போதுமானது. பாராளுமன்ற உறுப்பினராவதற்கும் கல்வித் தகைமை தேவையில்லை.

ஒரு வாக்காளராக இருந்தால் போதுமானதாகும். வாக்காளராவதற்கும் கல்வித் தகைமை தேவையில்லை. ஒருவர் இலங்கை பிரஜையாகவும் கடந்த ஏழாண்டுகளில் இரண்டு வருடத்துக்கு குறையாத சிறை தண்டனையை பெற்று அதில் குறைந்தது ஆறு மாத காலமாவது அத்தண்டனையை அனுபவிக்காதிருந்தால் போதுமானதாகும்.

எனவே ரங்வலவுக்கும் கலாநிதிப் பட்டம் இல்லை என்று நிரூபனமானாலும் அவர் தொடர்ந்தும் சபாநாயகராக பதவியில் இருக்க சட்டத்தில் தடையேதும் இல்லை.

பிரச்சினை என்னவென்றால் கடந்த பொதுத் தேர்தலின் போது தே.ம.ச தமது வேட்பாளர்களாக நிறுத்தியவர்களில் பெரும்பாலானோர் படித்தவர்களாகவும் பல்வேறு பட்டம் பெற்றவர்களாகவும் இருந்தனர். அதைப்பற்றி அக்கட்சியினர் பெருமையும் அடித்துக்கொண்டனர்.

இது ஏனைய அரசியல் கட்சிகளுக்கு பெரும் பிரச்சினையாகியது. அக்கட்சிகளின் பல வேட்பாளர்கள் பல்வேறு குற்றச்செயல்களுக்கு குற்றஞ்சாட்டப்பட்டவர்களாக இருந்தனர்.

இப்போது தமக்கு கலாநிதிப் பட்டம் இருப்பதை நிரூபிக்க முடியாமல் ரங்வல தடுமாறுகிறார்.

இந்த நிலையில், தே.ம. ச மக்களுக்கு பொய்யைக் கூறி மக்களை ஏமாற்றி அம் மக்களிடம் வாக்குப் பெற்று ஆட்சிபீடமேறியிருக்கிறது என்பதே எதிர்க்கட்சினரின் வாதமாகும்.

ஒருவர் தான் இந்த பிரச்சினையில் சிக்கிக்கொண்டார், மேலும் எத்தனை கள்ள பட்டதாரிகளோ தெரியாது என்றதொரு கருத்தை நாட்டில் உருவாக்குவதே அவர்களின் நோக்கமாகும். மக்கள் உண்மையிலேயே தே. ம. ச.யின் வேட்பாளர்களில் பெரும்பாலானோர் படித்தவர்கள் என்பதற்காகத் தான் அக்கட்சிக்கு வாக்களித்தார்கள் என்றால் நிச்சயமாக ரங்வலவின் பிரச்சினை ஓரளவுக்கு பாரதூரமானது என்பது உண்மையாகும்.

உண்மையிலேயே தே.ம.சக்தியின் வேட்பாளர்கள் படித்தவர்கள் என்பதற்காகவா மக்கள் அக்கட்சிக்கு வாக்களித்தார்கள்? சிலர் அவ்வாறும் வாக்களித்திருக்கலாம். பெரும்பாலான வாக்காளர்கள் ஏனைய கட்சிகளை வெறுத்தே தே.ம.சக்திக்கு வாக்களித்தனர்.

இது 2022 ஆம் ஆண்டு இடம்பெற்ற அரகலய என்றழைக்கப்படும் மக்கள் எழுச்சியின் பயனாக ஏற்பட்ட நிலைமையாகும். அந்த எழுச்சி இடம்பெறாதிருந்தால் தே.ம.ச. இம்முறையும் சுமார் ஐந்து வீத வாக்குகளையே பெற்றிருக்கும்.

எனினும் ஏனைய கட்சிகளின் தலைவர்கள் பொய்யர்கள், ஊழல்பேர்வழிகள் என்று கூறிய தே.ம. சக்தியின் பிரதான சுலோகமாக புதியதோர் அரசில் கலாசாரத்தை உருவாக்குவோம் என்றிருந்தது.

அதனடிப்படையில், சபாநாயகர் போன்ற உயர் பதவிக்கு நியமிக்கப்பட்ட ரங்வல தொடர்பான சம்பவம் அக்கட்சியின் நம்பகத்தன்மைக்கு பாரியதோர் அடி என்பதை மறுக்க முடியாது.

இச்சம்பவத்தை அடுத்து ரங்வலயோ அரசாங்கமோ அதைப் பற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை.

சுமார் ஒரு வார காலம் கழித்தே தவறு செய்வோர் எந்த அந்தஸ்த்தில் இருந்தாலும் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க கடந்த 13 ஆம் திகதி அரச ஊடக நிறுவனத் தலைவர்களிடம் கூறினார். அன்றே ரங்வலயும் சபாநாயகர் பதவியிலிருந்து இராஜினாமா செய்தார்.

பின்னர் பாராளுமன்ற இணையத்தளத்தில் கலாநிதி ஒருவரல்லாத நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயகாரவின் பெயருக்கு முன்னாலும் கலாநிதி என்று குறிப்பிடப்பட்டு இருந்தமை தெரிய வந்தது.

அது தவறுதலாக இடம்பெற்றுள்ளதாக பாராளுமன்ற அதிகாரிகள் தெரிவித்தனர். அத்தோடு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் அநுர கருணாதிலக்கவின் பெயருக்கு முன்னாலும் சிலர் கலாநிதி என்ற சொல்லை பாவிப்பதாக செய்திகள் வெளியாகின.

இது எவ்வாறு நடந்திருக்கும் என்ற கேள்வி இப்போது எழுந்துள்ளது. முன்னாள் அரசாங்கங்களினால் நியமிக்கபபட்ட அதிகாரிகளே இன்னமும் பாராளுமன்றத்தில் இருக்கின்றனர்.

எனவே, இந்த இரண்டு அமைச்சர்களும் தமது பெயருக்கு முன்பாக கலாநிதி என்ற பட்டம் எவ்வாறு குறிப்பிடப்பட்டன என்று விசாரணை நடத்துமாறு கடந்த திங்கட்கிழமை இரகசிய பொலிஸாரிடம் கோரியுள்ளனர். இது அரசாங்கத்தின் நம்பகத்தன்மையை கேள்விக்குறியாக்குவதற்கான திட்டமிடப்பட்ட செயல் என்று அவ்விருவரும் கூறியுள்ளனர்.

இப்போது இந்தப் பிரச்சினை எதிர்க் கட்சியினருக்கு எதிராகவும் திரும்பியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு பட்டமொன்று இருப்பதாக கூறப்பட்ட போதிலும் அது பட்டமொன்றல்ல என்று சிலர் வாதிடுகின்றனர்.

ஐ. ம. சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான அஜித் பி பெரேரா மற்றும் சமிந்திரானி கிரிஎல்ல ஆகியோர் தேர்தல் காலத்தில் தமது பெயருக்கு முன்பாக

“அதிநீதிச்” (அட்வகேட்) என்று குறிப்பிட்டதாகவும் அதுவும் மக்களை ஏமாற்றும் செயல் என்றும் ஆளும் கட்சியினர் வாதிடுகினறனர்.

1974 ஆம் ஆண்டுக்கு முன்னர் சட்டத்தரணிகள் புறொக்டர் மற்றும் அட்வகேட் என்று பிரிக்கப்பட்டு இருந்தனர்.

புறொக்டரைப் பார்க்கிலும் அட்வகேட் என்பவர் உயர்ந்தவராகவே கருதப்பட்டார். 1974 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அமுலாக்கப்பட்ட சட்டமொன்றின் மூலம் இந்த வேறுபாடு ஒழிக்கப்பட்டு சகலரும் சட்டத்தரணிகளாகவே கருதப்படுகின்றனர்.

எனவே இப்போதும் அட்வகேட் என்று பாவிப்பது மக்களை ஏமாற்றும் செயல் என அவர்கள் கூறுகின்றனர். ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் எம்.பி நாமல் ராஜபக்ஷ எவ்வாறு சட்டத்தரணியானார் என்பதைப் பற்றியும் பல்வேறு கதைகள் பரவியிருக்கின்றன.

ஒரு அரசியல்வாதியின் நம்பகத்தன்மை அவரது பெயரின் முன்பாக உள்ள பட்டத்தின் உண்மைத்தன்மையிலா இருக்கிறது என்று இப்போது ஒருவர் கேட்கலாம். அவர் போலி பட்டங்களை பயன்படுத்தவதாக இருந்தால் அதுவும் நம்பகத்தன்மைக்கு விழும் ஒரு அடி தான்.

அதனால் மக்கள் பாதிக்கப்படுவதில்லை. எனினும் மக்கள் வாழ்க்கையை சீர்குழைக்கும் வகையில் மக்களை திட்டமிட்டு ஏமாற்றியவர்களே கடந்த காலங்களில் காணக்கூடியதாக இருந்தனர்.

நாடு சுதந்திரம் அடைந்ததிலருந்து பதவிக்கு வந்த சகல கட்சிகளும் சந்திர மண்டலத்திலிருந்தாவது போதியளவு அரிசி வழங்குவோம், எட்டு இறாத்தல் தானியம் வழங்குவோம், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்போம் என்றெல்லாம் வாக்குறுதி அளித்து மக்களை ஏமாற்றின.

இப்போதும் இனப் பரச்சினை உள்ளிட்ட எத்தனையோ பாரதூரமான பிரச்சினைகள் இருக்க எதிர்க்கட்சிகள் இந்தப் பட்டப் பிரச்சினையில் தொற்றிக்கொண்டு இருக்கின்றன. இவை அவ்வடிப்படை பிரச்சினைகளை மூடி மறைக்கவே உதவும்.



# வாழ்வியல் தரிசனம்

காரிருளில் ஒளி தேவைப்படுகிறது. கும்மிட்டில் நடக்க, எல்லோருக்கும் பயம் வருவது இயற்கை. அதுபோல, இருண்ட மனதைப் போக்கினால்த் தான் இன்பம் சூழும். இதற்கு என்ன வழி?

மக்கள் சேவைக்குள் புகுந்துவிடுக. உண்மையான மக்கள் சேவையே, மகேசன் சேவை என்பதை உணர்வீர்கள். இதயத்தில் நிம்மதி ஒளிவிடும். தன்னை மறந்து, புதுஉலகில்த் தவழ, இந்த வழியையே, புத்திசாலிகள் விருப்பத்துடன் செய்கின்றார்கள்.

உங்கள் உடல்வலுவுக்கு ஏற்ப, விரும்பும் நற்செயலுடன் இணைக. சிறிது நேரமாவது செய்யும் நற்காரியங்கள், விஸ்வரூபமாக மாறும்; செய் கருமங்களும் பெருகும்.

உங்களை நோக்குபவர்கள், உங்களுடன் தொடர்ந்து பயணிப்பார்கள். செய்து பாருங்கள்! அதன் புதுமையும் அற்புதங்களும் நன்குபுரியும்.

எங்களால் யாராவது, நல்ல பயனைக் கண்டால், அதைவிடத் திருப்தி ஏது? சமானிய மனிதன், மகா மனிதனாக மாறியது, இதுபோல என்பதை அறிவீர்களா?

வாழும் வழியைச் சுலபமாக்குங்கள். நிம்மதியுடனும் மகிழ்ச்சியுடனும் வாழும் வழியைத் தேர்ந்தெடுங்கள். நல்லதைச் செய்ய ஏது சுணக்கம்? உடன் எழுக.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

# மாற்றுங்கள்

கிளிநொச்சி அக்கராயன் தாழ்பாலம் மேம்பாலமாக மாற்றப்படாது இருப்பதன் காரணமாக பிரதேச மக்கள் மழை காலத்தில் பெரும் நெருக்கடியினை எதிர்கொண்டு வருவதாக தெரிவிக்கின்றனர்.

அக்கராயன் குளத்தின் 600 அடி நீளமான வான் பகுதி வழியாக வெளியேறும் வான் வெள்ளம் திருமுறிகண்டி அக்கராயன் வீதியில் உள்ள 25 அடி நீளமான வான் வழியாக வெள்ளம் வெளியேற முடியாமல் 250 மீற்றர் வரை வீதியினை மூடி வெள்ளம் பாய்வதன் காரணமாக அக்கராயன் பிரதேச வைத்தியசாலையின் நோயாளர் வண்டி உட்பட அனைத்து வாகனங்களும் மாற்று வழிகளை பயன்படுத்த வேண்டிய நிலைமை ஏற்படும்.

பாலத்தினை மேம்பாலமாக மாற்றுங்கள் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

நடராசா கிருஸ்ணகுமார்

### திருத்தம்

17.12.2024 திகதி எமது மின்னிதழில், 'தமிழனுக்கு தமிழனே எதிரி' எனும் தலைப்பில், 4ஆம் பக்கத்தில் வெளியான கட்டுரையில், கட்டுரையாளரின் பெயர் மொஹமட் பாதுஷா என தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுவிட்டது. அந்த தவறுக்காக ஏற்பட்ட அசௌகரியங்களுக்குவருந்துகின்றோம். அந்த கட்டுரையை முருகானந்தன் தவம் என்பவரே எழுதினார். (ஆர்)



# நிவாரணம் விடயங்களிலும் ஆதரவு வழங்கப்படும்

அதி மேதகு ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்க அவர்களே,

இரு நாடுகளையும் சேர்ந்த பேராளர்களே,

ஊடக நிறுவனங்களைச் சேர்ந்த நண்பர்களே,

உங்கள் அனைவருக்கும் வணக்கமும் வாழ்த்துகளும்! ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அவர்களை இந்தியாவுக்கு நான் அன்புடன் வரவேற்கின்றேன்.

ஜனாதிபதியாக இந்தியாவுக்கு முதலாவது விஜயத்தினை மேற்கொள்வதற்கு நீங்கள் மேற்கொண்ட தீர்மானம் குறித்து நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அவர்களது இந்த விஜயமானது நமது உறவுகளில் புத்துணர்ச்சியுடனான ஆற்றல்களையும் சக்தியினையும் உட்புகுத்தியுள்ளது.

நமது பங்குடைமைக்கான எதிர்கால நோக்கினை நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம். அத்துடன் நமது பொருளாதார பங்குடைமையில் முதலீட்டினை அடிப்படையாகக் கொண்ட வளர்ச்சி மற்றும் இணைப்புக்கு நாங்கள் முக்கியத்துவம் கொடுத்துள்ளோம்.

நேரடியான தொடர்புகள், டிஜிட்டல் மற்றும் ஆற்றல் அடிப்படையிலான இணைப்பு ஆகியவை எங்கள் கூட்டாண்மையின் முக்கிய தூண்களாக இருக்கவேண்டுமென நாம் தீர்மானித்துள்ளோம்.

இரு நாடுகளுக்கும் இடையிலான மின்சார வலையமைப்பிற்கான இணைப்பு மற்றும் பல்பொருள் பெட்ரோலிய உற்பத்திகளை விநியோகிக்கும் குழாய் கட்டமைப்பு ஆகியவற்றை ஸ்தாபிப்பதற்காகவும் நாம் பணியாற்றவுள்ளோம்.

சம்பூர் சூரியக் கல மின்சக்தி திட்டம் துரிதப்படுத்தப்படும். இவற்றுக்கு மேலதிகமாக இலங்கையில் உள்ள மின் உற்பத்தி நிலையங்களுக்கு LNG வழங்கப்படும்.

> **இரு நாடுகளுக்கும் இடையிலான மின்சார வலையமைப்பிற்கான இணைப்பு மற்றும் பல்பொருள் பெட்ரோலிய உற்பத்திகளை விநியோகிக்கும் குழாய் கட்டமைப்பு ஆகியவற்றை ஸ்தாபிப்பதற்காகவும் நாம் பணியாற்ற காத்திருக்கிறோம்**

இருதரப்பு வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக ETCA உடன்படிக்கையினை நிறைவேற்றும் முயற்சிகள் இரு தரப்பாலும் மேற்கொள்ளப்படும்.

நண்பர்களே,

இன்றுவரை 5 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியிலான நன்கொடை மற்றும் கடனுதவி இந்தியாவால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள 25 மாவட்டங்களுக்கும் நாங்கள் ஆதரவினை வழங்கி வருகின்றோம்.

எமது பங்காளி நாடுகளின் அபிவிருத்தித் தெரிவுகளுக்கு அமைவாகவே எமது திட்டங்கள் தெரிவு செய்யப்படுகின்றன.

இந்த ஆதரவினை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் வகையில், மாகோ முதல் அனுராதபுரம் வரையிலான ரயில் பாதை சமிக்கைகள் மற்றும் காங்கேசன்துறை துறைமுக மீளமைப்புக்காக நன்கொடை அடிப்படையிலான ஆதரவினை வழங்க தீர்மானித்துள்ளோம்.

அத்துடன் எமது கல்வி ரீதியான ஒத்துழைப்பின் அங்கமாக இலங்கையில் உள்ள கிழக்கு பல்கலைக் கழகம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த 200 மாணவர்களுக்கு நாம் மாதாந்த புலமைப் பரிசில்களை வழங்கவுள்ளோம்.

அடுத்துவரும் ஐந்தாண்டு காலப்பகுதிக்குள் இலங்கையைச் சேர்ந்த 1500 சிவில் சேவை அதிகாரிகளுக்கு இந்தியாவில் பயிற்சிகள் வழங்கப்படும்.

வீடமைப்புத் திட்டம், புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் உட்கட்டமைப்பு சார்ந்த திட்டங்களுடன் இலங்கையின் விவசாயம் பால்பொருள் உற்பத்தி மற்றும் மீன்பிடி ஆகிய துறைகளுக்கும் இந்தியா தனது ஆதரவை வழங்கும். இலங்கையின் பிரத்தியேக டிஜிட்டல் அடையாள அட்டை திட்டத்தில் இந்தியா பங்காளராக இருக்கும்.

நண்பர்களே,

எமது பாதுகாப்பு ஒன்றுடனொன்று இணைக்கப்பட்டுள்ளது என்பதில் ஜனாதிபதி திசாநாயக்கா அவர்களும் நானும் முழுமையான இணக்கப்பாட்டினைக் கொண்டிருக்கின்றோம். பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கையினை துரிதமாக நிறைவேற்றவேண்டுமென நாம் தீர்மானித்துள்ளோம். அத்துடன் நீரியல் சார்ந்த துறைகளிலும் ஒத்துழைப்புடன் செயற்பட நாம் இணங்கியுள்ளோம்.

பிராந்தியத்தின் சமாதானம், பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக்கு கொழும்பு பாதுகாப்பு குழுமம் மிகவும் முக்கியமான தளம் என நாம் நம்புகின்றோம்.

இவ்வாறான குடையின் கீழ், கடல்சார் பாதுகாப்பு, பயங்கரவாத ஒழிப்பு, இணையப் பாதுகாப்பு, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் கடத்தல்களுக்கு எதிரான போராட்டங்கள், மனிதாபிமான உதவி மற்றும் அனர்த்த நிவாரணம் ஆகிய விடயங்களிலும் ஆதரவு வழங்கப்படும்.

> **இன்றுவரை 5 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியிலான நன்கொடை மற்றும் கடனுதவி இந்தியாவால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது. 25 மாவட்டங்களுக்கும் நாங்கள் ஆதரவினை வழங்கி வருகின்றோம்.**

நண்பர்களே,

இந்திய - இலங்கை மக்களிடையில் காணப்படும் உறவுகள் நமது நாகரிகங்களில் வேரூன்றியவை ஆகும்.

பாளி மொழியினை செம்மொழியாக அறிவித்த தருணத்திலும் அதனுடன் இணைந்த கொண்டாட்டங்களிலும் இலங்கையும் எம்முடன் இணைந்திருந்தது.

கப்பல் சேவைகளும், சென்னை, யாழ்ப்பாண விமான இணைப்புகளும் சுற்றுலாத்துறையினை மாத்திரம் மேம்படுத்தவில்லை, ஆனால், கலாசார உறவுகளையும் வலுவாக்கியுள்ளன.

நாகபட்டினம் மற்றும் காங்கேசன்துறை இடையிலான கப்பல் சேவைகள் வெற்றிகரமாக மீள ஆரம்பிக்கப்பட்டிருக்கும் நிலையில், இராமேஸ்வரம் மற்றும் தலைமன்னார் இடையிலான கப்பல் சேவையினையும் ஆரம்பிக்க நாங்கள் கூட்டாக தீர்மானித்துள்ளோம்.

பௌத்த மத வளாகம் மற்றும் இலங்கையின் இராமாயணச் சுவடுகள் மூலம் சுற்றுலாத்துறையில் காணப்படும் மகத்தான ஆற்றலை உணர்ந்து கொள்வதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

நண்பர்களே,

நமது மீனவர்களின் வாழ்வாதாரத்துடன் தொடர்புடைய விவகாரங்கள் குறித்து விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்த விவகாரம் தொடர்பாக மனிதாபிமான ரீதியிலான அணுகுமுறையினை கடைப்பிடிக்க வேண்டுமென நாம் இருவரும் இணங்கியுள்ளோம்.

அத்துடன் இலங்கையின் நல்லிணக்கம் மற்றும் புனரமைப்பு குறித்தும் நாம் கலந்துரையாடியுள்ளோம்.

ஜனாதிபதி திசநாயக்க அவர்கள் அனைவரையும் உள்ளடக்கிய தனது நோக்கு குறித்து என்னிடம் கூறியுள்ளார்.

தமிழ் மக்களின் அபிலாஷைகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றுமென நாம் நம்புகின்றோம்.

அத்துடன், இலங்கை அரசியலமைப்பினை முழுமையாக அமுல்படுத்தவும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்குமான தமது உறுதி மொழியினை அவர்கள் நிறைவேற்ற வேண்டும்.

நண்பர்களே,

தேசத்தைக் கட்டியெழுப்பும் அவரது முயற்சிகளில் இந்தியா உண்மையானதும் நம்பத்தகுந்ததுமான பங்காளியாக இருக்குமென நான் ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்க அவர்களிடம் உறுதியளித்துள்ளேன்.

ஜனாதிபதி திசநாயக்க அவர்களையும் அவரது தூதுக்குழுவினரை மீண்டும் ஒரு முறை அன்புடன் இந்தியாவுக்கு வரவேற்கின்றேன்.

அத்துடன், புத்தகயாவிற்கு அவர் மேற்கொள்ளும் விஜயம் சிறப்பானதாக அமைய வாழ்த்துவதுடன், அவ்விஜயமானது ஆன்மீக சக்தி மற்றும் புத்துணர்ச்சி ஆகியவற்றால் நிறைந்திருக்குமென நம்புகின்றேன்.

அனைவருக்கும் மிக்க நன்றி.



# ஒரு பாடலுக்கு நடனமாடும் நயன்தாரா?

பிரபல தெலுங்கு நடிகர் பிரபாஸ் நடித்து வரும் 'தி ராஜா சாப் படத்தை மாருதி இயக்கி வருகிறார். ஃபேண்டசி மற்றும் ஹாரர் கதை அம்சம் கொண்ட இந்த படத்தின் டீசர் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.

இந்த நிலையில், இந்த படத்தில் இடம்பெற்றுள்ள ஒரு பாடலுக்கு நடிகை நயன்தாரா நடனமாட இருப்பதாகவும், இந்த பாடலின் படப்பிடிப்பு விரைவில் நடைபெறும் என்றும் கூறப்படுகிறது. இந்த தகவல் ஆச்சரியத்தை அளித்துள்ளதுடன், படக்குழுவினர் இதனை உறுதி செய்யவில்லை.

'தி ராஜா சாப்' திரைப்படம் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி வெளியாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், படப்பிடிப்பு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

# இளமைக்கு திரும்பிய அஜித்!

வயதான நடிகர்களின் இளமை தோற்றத்திற்கு தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில், அஜீத் எந்தவித தொழில்நுட்பமும் இல்லாமல் இயல்பாக இளமைக்கு திரும்பிய புகைப்படம் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

அஜித் தற்போது மகிழ் திருமேனி இயக்கத்தில் உருவாகி வரும் "விடாமுயற்சி" மற்றும் ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் உருவாகி வரும் "குட் பேட் அக்லி" ஆகிய படங்களில் நடித்து வருகிறார்.

இந்த இரண்டு படங்களின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வரும் நிலையில், தற்போது அவர் "குட் பேட் அக்லி" படத்தின் படப்பிடிப்பில்



இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்த நிலையில், இயக்குநர் ஆதிக் ரவிச்சந்திரன் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அஜித் இளமை தோற்றத்தில் இருக்கும் புகைப்படத்தை பகிர்ந்து உள்ளார். AI மற்றும் DeAging தொழில்நுட்பம் உதவியில்லாமல் உடல் பருமனை குறைத்து, இளமை தோற்றத்திற்கு திரும்பிய அஜித்தின் இந்த புதிய தோற்றத்தை பார்த்து அவரது ரசிகர்கள் ஆச்சரியம் அடைந்துள்ளனர்.

மேலும், இந்த பதிவில் ஆதிக் ரவிச்சந்திரன், "வாழ்நாளில் எனக்கு மறக்க முடியாத ஒரு வாய்ப்பை அஜீத் அவர்கள் கொடுத்துள்ளார். எனது கனவு நினைவாகிவிட்டது. அவருடைய அன்புக்கு ரொம்ப நன்றி. இன்று கடைசி நாள் படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது. இது மிகவும் அழகான பயணம்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# "சூர்யா 45" படத்தில் 3ஆவது நாயகி




சூர்யா நடிப்பில், ஆர். ஜே. பாலாஜி இயக்கத்தில் உருவாகி வரும் சூர்யாவின் 45ஆவது திரைப்படத்தில் நாயகியாக த்ரிஷா நடிக்க இருப்பதாக கடந்த சில நாட்களுக்கு முன் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

அதன் பின்னர், இந்த படத்தில் 'லப்பர் பந்து'படத்தில் நடித்த ஸ்வாசிகா இணைந்துள்ளதாக கூறப்பட்டது. இந்நிலையில், தற்போது மூன்றாவது நாயகியாக ஸ்வேதா இணைகிறார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர் ஏற்கனவே "அதே கண்கள்", "தீரா காதல்", "கருடன்" உள்ளிட்ட படங்களில் நடித்துள்ளார். தற்போது சூர்யாவின் 45-வது திரைப்படத்திலும் இணைந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமன்றி, இந்த படத்தில் காமெடி நடிகர் யோகி பாபு இணைந்திருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது படத்தின் எதிர்பார்ப்பை அதிகரிக்கச் செய்துள்ளது.

# உருகிய சமந்தா

நடிகர் அல்லு அர்ஜுன் சிறையில் இருந்து வீடு திரும்பிய நிலையில், அவரை அவரது மனைவி கட்டி அணைத்து கண்ணீர் விட்ட வீடியோவை நடிகை சமந்தா தனது சமூக வலைதளத்தில் பதிவு செய்துள்ளார். மேலும், "நான் அழவில்லை" என குறிப்பிட்டுள்ள இந்த வீடியோ இணையத்தில் வைரல் ஆகி வருகிறது.




அல்லு அர்ஜுன் நடித்த 'புஷ்பா2' திரைப்படம் கடந்த 5ஆம் திகதி வெளியானது. இந்த படத்தை பார்க்க ரேவதி என்ற பெண் திரையரங்குக்கு தனது கணவர் மற்றும் குழந்தையுடன் வந்திருந்தார்.

அப்போது திடீரென அல்லு அர்ஜுன் அங்கு வந்ததால் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி, ரேவதி உயிரிழந்தார். இது குறித்து வழக்கு பதிவு செய்யப்பட்ட நிலையில், அல்லு அர்ஜுன் கைது செய்யப்பட்டார். அதன் பின், தெலுங்கானா உயர்நீதிமன்ற உத்தரவின் பேரில் அவர் விடுதலை செய்யப்பட்டார்.



# புத்தாண்டு தினத்தில் டபுள் விருந்து



கடந்த சில மாதங்களுக்கு முன்பு தளபதி விஜய் "தமிழக வெற்றி கழகம்" என்ற அரசியல் கட்சியை தொடங்கிய நிலையில், அவர் தற்போது நடித்துக் கொண்டிருக்கும் 'தளபதி 69' படத்துடன் சினிமாவை விட்டு விலகப் போவதாக அறிவித்துள்ளார்.

விஜய்யின் கடைசி படம் என்பதால், இந்த படத்திற்கு மிகப்பெரிய எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. எச் வினோத் இயக்கத்தில் உருவாகி வரும் இந்த படத்தின் படப்பிடிப்பு சமீபத்தில் தொடங்கிய நிலையில், விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றது.

இந்த நிலையில், இந்த படம் குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு புத்தாண்டு தினத்தில் வெளியாக இருப்பதாக கூறப்படுகிறது.

டிசெம்பர் 31ஆம் திகதி மாலை ஆறு மணிக்கு 'தளபதி 69' படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியாகும் என்றும், ஜனவரி 1 புத்தாண்டு தினத்தில் அதிகாலை 12 மணிக்கு இரண்டாவது லுக் போஸ்டர் வெளியாகும் என்றும் கூறப்படுகிறது.

மேலும், இந்த படத்தில் நடிக்கும் நட்சத்திரங்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்களின் முழு விவரங்களையும் அறிவிக்க படக்குழுவினர் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. இந்த தகவல் விஜய் ரசிகர்களுக்கு பெரும் உற்சாகத்தை அளித்துள்ளது.

கனடா

### கனடாவின் துணை பிரதமர்

# இராஜினாமா

கனடா நாட்டின் துணை பிரதமரும் அந்நாட்டின் நிதியமைச்சருமான கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட், தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

அந்நாட்டின் வருடாந்த நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்வதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னர், தனது பதவியை இராஜினாமா செய்வதாக கிறிஸ்டியா அறிவித்துள்ளார்.



துணை பிரதமர் மற்றும் நிதியமைச்சர் என இரு பதவிகளில் இருந்தும் இராஜினாமா செய்துள்ள கிறிஸ்டியா, பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான அமைச்சரவையில், அவருக்கு எதிரான கருத்து வேறுபாட்டை முதல் முறையாக பொதுவெளியில் வெளிப்படுத்தி இருக்கிறார்.

அண்மையில், கனடாவை சேர்ந்த ஒவ்வொருவருக்கும் 250 கனெடிய டொலர்களை காசோலையாக வழங்குவதற்கான கொள்கை தொடர்பாக பிரதமர் ட்ரூடோ மற்றும் துணை பிரதமராக இருந்த கிறிஸ்டியா ஆகியோருக்கு இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட் நீண்ட காலமாக ட்ரூடோவின் லிபரல் கட்சியில் மிக முக்கிய தலைவராக இருந்து வருகிறார். 2020ஆம் ஆண்டில் இருந்து கனடா நாட்டின் நிதியமைச்சராகவும் கிறிஸ்டியா பதவியில் இருந்து வந்தார்.

இந்த நிலையில், துணை பிரதமர் மற்றும் நிதியமைச்சர் பதவிகளில் இருந்து இராஜினாமா செய்துள்ள கிறிஸ்டியா, கனடாவின் நிதி வருவாயை கையிருப்பில் வைத்திருக்க அறிவுறுத்தி இருக்கிறார்.

தனது இராஜினாமா கடிதத்தில் “டிரம்ப்-இன் அச்சுறுத்தல் மிகப்பெரிய சவாலாக இருக்கும்” என்று, கிறிஸ்டியா குறிப்பிட்டுள்ளார்.

கிறிஸ்டியா தொடர்ந்து லிபரல் உறுப்பினராக அந்நாட்டு பாராளுமன்றத்தில் தொடர்ந்து இருக்க விரும்புவதாக தெரிவித்துள்ளார். மேலும், வரவருக்கும் கனடா தேர்தலில் அவர் மீண்டும் போட்டியிடுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, “இறக்குமதி செய்யப்படும் கனடா நாட்டு பொருட்களுக்கு 25 சதவீதம் வரி விதிக்கப்படும்” என்று, அமெரிக்க ஜனாதிபதியாக பொறுப்பேற்க இருக்கும் டொனால்ட் டிரம்ப் தெரிவித்திருக்கிறார்.

இது கனடாவின் பொருளாதாரத்தை பாதிக்கும் என்று பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நியூசிலாந்து

## நியூசிலாந்துக்கு சுனாமி எச்சரிக்கை

பசிபிக் பெருங்கடலின் தெற்கே ஓசியானியாப் பகுதியில் அமைந்துள்ள வானுவாட்டு தீவில், சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம், 7.3 ரிச்டர் அளவில் பதிவாகியுள்ளது.

இதனால் பீதியடைந்த மக்கள், வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சம் அடைந்தனர்.



இந்த நிலநடுக்கமானது போர்ட்- விலாவிற்கு மேற்கே 30 கிலோமீற்றர் தொலைவில் 43 கிலோமீற்றர் ஆழத்தில் தாக்கி உள்ளது.

இதனால் வானுவாட்டு தீவை சுற்றியுள்ள தீவுகள் மற்றும் நியூசிலாந்துக்கு சுனாமி எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

பிரித்தானியா

### இந்தியர் படுகொலை;

## 12 வயது சிறுமி கைது

பிரித்தானியாவில், இந்தியரை கொன்ற சம்பவம் தொடர்பில், 12 வயது சிறுமி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலண்டனில் வசித்து வந்த பீம் சென் கோலி என்ற இந்திய வம்சாவளியான நபர், கடந்த செப்டம்பர் மாதம் லெய்செஸ்டர் பூங்காவுக்கு தனது செல்லப்பிராணியுடன் நடைபயிற்சி மேற்கொண்டார்.

அப்போது அங்கிருந்த சிலர் குறித்த நபரை தாக்கினர். இதில் படுகாயம் அடைந்த அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இதுதொடர்பாக 15 வயது சிறுவனை பொலிஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர். சிறுவனிடம் நடத்திய விசாரணையில் 12 வயது சிறுமியும் இந்த தாக்குதலில் ஈடுபட்டது தெரிய வந்துள்ளது.

இதையடுத்து, அந்த சிறுமியையும் கைது செய்யப்படு,நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதுதொடர்பாக பொலிஸார் கூறுகையில், “செப்டம்பரில் பீம் கோலி இறந்ததைத் தொடர்ந்து, மற்றொரு நபராக 12 வயது சிறுமி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

துருக்கி

### கள்ளச்சாராயம் குடித்து

## 3.37 பேர் உயிரிழப்பு

துருக்கி நாட்டில் கடந்த மாதம் முதல் கள்ளச்சாராயம் குடித்து பலர் உயிரிழந்துள்ளனர்.

அந்த வகையில், கடந்த மாதம் 1ஆம் திகதி முதல் கள்ளச்சாராயம் குடித்து துருக்கி தலைநகர் இஸ்தான்புல்லில் 37 பேர் உயிரிழந்துள்ளதாக, அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

கள்ளச்சாராயம் குடித்தவர்களில் 17 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதையடுத்து, கள்ளச்சாராய ஒழிப்பு நடவடிக்கையில் அந்நாட்டு அரசு இறங்கியுள்ளது.

மத்திய பிரதேசம்

### யாசகர்களுக்கு

## யாசகம் போடுவதற்கு தடை

மத்திய பிரதேசத்தில் உள்ள இந்தூர் மாவட்டத்தில், யாசகர்களுக்கு யாசகம் போடுவதற்கு தடை செய்யப்பட்டுள்ளது.

நாட்டின் தூய்மையான நகரங்களின் பட்டியலில் தொடர்ந்து 7ஆவது முறையாக முதலிடம் பெற்ற நகரமாக இந்தூர் இருக்கிறது. இந்த நிலையில், அடுத்தக்கட்டமாக யாசகர்கள் இல்லாத நகரமாக இந்தூரை மாற்ற முக்கிய முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அதன் ஒரு பகுதியாக, வரும் ஜனவரி 1ஆம் திகதி முதல், யாசகர்களுக்கு



பணம் கொடுப்பவர்கள் மீது வழக்கு பதிவு செய்யும் பணியை மாவட்ட நிர்வாகம் தொடங்கியுள்ளது.

இது குறித்து ஊடகவியலாளர்களிடம் இந்தூர் மாவட்ட கலெக்டர் ஆஷிஷ் சிங் கூறியதாவது,

“இந்தூரில் யாசகம் எடுப்பதை தடை செய்து நிர்வாகம் ஏற்கெனவே உத்தரவு பிறப்பித்துள்ளது. பிச்சை எடுப்பதற்கு எதிரான எங்கள் விழிப்புணர்வு பிரசாரம் இந்த மாத இறுதி வரை தொடரும்.

“வரும் ஜனவரி 1ஆம் திகதி முதல் யாராவது யாசகம் போடுவது கண்டுபிடிக்கப்பட்டால், அவர் மீது எப்.ஐ.ஆர் பதிவு செய்யப்படும். இந்தூரில் வசிப்பவர்கள் அனைவருக்கும் யாசகம் கொடுப்பதன் மூலம் பாவத்தில் பங்குதாரர்களாக மாற வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்” என்றார்.

புதுடெல்லி

### இரட்டை இலை சின்னம் தொடர்பான மனு:

## விரைந்து விசாரிக்குமாறு உத்தரவு

தேர்தல் ஆணையகத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கை, டெல்லி உச்சநீதிமன்றம் முடித்து வைத்தது.

அ.தி.மு.க. ஒருங்கிணைப்பு குழுவை சேர்ந்த புகழேந்தி, டெல்லி உச்சநீதிமன்றத்தில், தேர்தல் ஆணையகத்துக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கை டெல்லி உச்சநீதிமன்ற நீதிபதி மனோஜ் தலைமையிலான அமர்வு விசாரித்தது.

அப்போது, எடப்பாடி பழனிசாமி தரப்பில் ஆஜரான சட்டத்தரணி, இந்த மனுவுக்கு




ஆட்சேபம் தெரிவித்தார். இதையடுத்து, தேர்தல் ஆணையம் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி, இந்த விவகாரம் தொடர்பாக புகழேந்திக்கு ஏற்கெனவே நோட்டீஸ் அனுப்பி, அவரை வரும் 24ஆம் திகதி விசாரணைக்கு அழைத்துள்ளோம் எனவும், அவரது கோரிக்கை மனுவும் அன்றைய தினம் பரிசீலிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

அதேசமயம், நீதிமன்ற அவமதிப்பு வழக்கை தாக்கல் செய்த பிறகே தேர்தல் ஆணையம் தனக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளதாக, புகழேந்தி தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அனைத்து தரப்பு வாதங்களையும் பதிவு செய்த நீதிபதி, புகழேந்தியின் கோரிக்கை மனுவை விரைந்து விசாரிக்க தேர்தல் ஆணையகத்துக்கு உத்தரவிட்டார்.

அத்துடன், தேர்தல் ஆணையகத்துக்கு எதிராக புகழேந்தி தாக்கல் செய்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கை முடித்து வைத்து, நீதிபதி உத்தரவிட்டார்.




### அவுஸ்திரேலியாவுக்கெதிரான

# மூன்றாவது டெஸ்டில் தடுமாறும் இந்தியா

அவுஸ்திரேலியாவுக்கெதிரான மூன்றாவது டெஸ்டில் இந்தியா தடுமாறுகிறது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை இந்தியாவும், இரண்டாவது போட்டியை அவுஸ்திரேலியாவும் வென்ற நிலையில், பிறிஸ்பேணில் சனிக்கிழமை (14) ஆரம்பமான இப்போட்டியின் நேற்றைய நான்காம் நாளை தமது முதலாவது இனிங்ஸில் 4 விக்கெட்டுகளை இழந்து 51 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்து அணித்தலைவர் பற் கமின்ஸ் (3), நேதன் லையன், மிற்செல் ஸ்டார்க்கிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து நாள் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 252 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

தற்போது களத்தில் ஆகாஷ் டீப் 27 ஓட்டங்களுடனும், ஜஸ்பிரிட் பும்ரா 10 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதுள்ளனர். முன்னதாக லோகேஷ் ராகுல் 84, இரவீந்திர ஜடேஜா 77 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

### மூன்றாவது டெஸ்டில்

## இங்கிலாந்தைத் தோற்றகடித்த நியூசிலாந்து

இங்கிலாந்துக்கெதிரான மூன்றாவது டெஸ்டை நியூசிலாந்து வென்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளையும் வென்ற இங்கிலாந்து தொடரை ஏற்கெனவே கைப்பற்றிய நிலையில், ஹமில்டனில் சனிக்கிழமை (14) ஆரம்பித்து செவ்வாய்க்கிழமை (17) முடிவுக்கு வந்த மேற்படி போட்டியில் 423 ஓட்டங்களால் நியூசிலாந்து வென்றது.



ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

நியூசிலாந்து: 347/10 (துடுப்பாட்டம்: மிற்செல் சான்ட்னெர் 76, டொம் லேதம் 63, கேன் வில்லியம்சன் 44, வில் யங்க் 42 ஓட்டங்கள். பந்துவீச்சு: மத்தியூ பொட்ஸ் 4/90, குஸ் அட்கின்ஸன் 3/66, பிறைடன் கார்ஸ் 2/78, பென் ஸ்டோக்ஸ் 1/91)

இங்கிலாந்து: 143/10 (துடுப்பாட்டம்: ஜோ றூட் 32, பென் ஸ்டோக்ஸ் 27 ஓட்டங்கள். பந்துவீச்சு: மற் ஹென்றி 4/48, மிற்செல் சான்ட்னெர் 3/7, வில் ஓ’ருர்க் 3/33)

நியூசிலாந்து: 453/10 (துடுப்பாட்டம்: கேன் வில்லியம்சன் 156, டரைல் மிற்செல் 60, வில் யங்க் 60, மிற்செல் சான்ட்னெர் 49, டொம் பிளென்டெல் ஆ.இ 44, றஷின் றவீந்திர 44 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜேக்கப் பெத்தெல் 3/72, பென் ஸ்டோக்ஸ் 2/52, ஷொய்ப் பஷிர் 2/170, குஸ் அட்கின்ஸன் 1/16, ஜோ றூட் 1/17, மத்தியூ பொட்ஸ் 1/64)

இங்கிலாந்து: 234/10 (துடுப்பாட்டம்: ஜேக்கப் பெத்தெல் 76, ஜோ றூட் 54, குஸ் அட்கின்ஸன் 43 ஓட்டங்கள். பந்துவீச்சு: மிற்செல் சான்ட்னெர் 4/85, டிம் சௌதி 2/34, மற் ஹென்றி 2/62, வில் ஓ’ருர்க் 1/37)

போட்டியின் நாயகன்: மிற்செல் சான்ட்னெர்

தொடரின் நாயகன்: ஹரி ப்றூக்

### இத்தாலிய சீரி ஏ தொடர்:

## லேஸியோவை வீழ்த்திய இன்டர் மிலன்

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், லேஸியோவின் மைதானத்தில் செவ்வாய்க்கிழமை (17) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 6-0 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான இன்டர் மிலன் வென்றது.




இன்டர் சார்பாக ஹகன் கல்ஹனொக்லு, பெடெரிக்கோ டிமார்கோ, நிகொலோ பரெல்லா, டென்ஸில் டம்ஃப்பிறைஸ், கார்லோஸ் அகஸ்டோ, மார்க்கஸ் துராம் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

## ஆர்சனலிலிருந்து வெளியேற விரும்பாத ஸ்டேர்லிங்க்

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான ஆர்சனலின் முன்களவீரரான ரஹீம் ஸ்டேர்லிங்க், நடப்புப் பருவகாலத்தில் பெரும்பாலும் விளையாடியிருக்காதபோதும் கடனடிப்படையில் நடப்புப் பருவகாலத்துக்கு இன்னொரு பிறீமியர் லீக் கழகமான செல்சியிலிருந்து ஆர்சனலுக்குச் சென்றதை முன்னரே முடிவுறுத்திக் கொள்ள விரும்பவில்லையெனக் கூறப்படுகிறது.




### அனைத்து வகைப் போட்டிகளுக்குமான

## மேற்கிந்தியத் தீவுகளின் பயிற்சியாளராக சமி



மேற்கிந்தியத் தீவுகளின் அனைத்து வகைப் போட்டிகளுக்கான தலைமைப் பயிற்சியாளராக டரன் சமி பெயரிடப்பட்டுள்ளார்.

கடந்தாண்டு முதல் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளுகான பயிற்றுவிப்பாளராக இருக்கும் சமி, எதிர்வரும் ஆண்டு ஏப்ரல் மாதம் அன்ட்ரே கோலியைப் பிரதியிட்டு டெஸ்ட் அணியையும் பொறுப்பெடுக்கவுள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 18, டிசெம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு- 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.